அடையாளம் காட்டக்கூடிய

# இளைஞருக்கு பாதுகாப்பு கருதிகாவல்

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 19 தை 19 ஸபர் 22 இதழ் 353
யாழ்ப்பாணம் புதன்கிழமை 1-2-78



UNIVERSITY OF SRI LANKA JAFFNA RECEIVED



லாலா தயாரிப்பு




சன் சயின் சோப் மேல் உறை 25 அனுப்பி ஒரு அப்பியாசக் கொப்பியை பெற்றுக் கொள்ளுங்கள்

லாலா சோப் தொழிற்சாலை அச்சுவேலி


## கனகர் உடல்நிலை தேறுகிறது

[கொழும்பு]

பொத்துவில் எம் பி திரு எம் கனகரத்தினம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து வரும் துப்பறியும் பொலிசார் இது வரை 145 பேர் வரை விசாரணை செய்துள்ளனர் என்று தெரிகிறது.

திரு கனகரத்தினத்தை துப்பாக்கியால் சுட்டவர்களை அடையாளம் காட்டக் கூடிய இளைஞர் ஒருவரை பொலிஸார் பாதுகாப்புகருதிகாவலில் வைத்துள்ளனர் என்றும் தெரிகிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தைச் சேர்ந்த ஊழியர் ஒரு

[6ம் பக்கம் பார்க்க]

# பாராளுமன்ற சிறப்புரிமை திருத்த சட்டம்

# அரசியல் பழிவாங்கலுக்கு வழிவகுக்கும்

## பேரவையில் நல்லூர் சிவா'

[கொழும்பு]

பிரதமரினால் தேசிய அரசுப் பேரவையில் [illegible] பாராளுமன்ற தத்துவங்களும் சிறப்புரிமைகளும் சட்ட திருத்தம் அரசியல் பழிவாங்கலுக்கு வழிவகுக்கும் என்று நல்லூர் தொகுதி எம். பி. திரு. எம் சிவசிதம்பரம் நேற்று தேசிய அரசுப் பேரவையில் கூறி [illegible]

புதிய சட்டத் திருத்தத்தின்படி பேரவை உறுப்பினர்கள் தவது உரிமைகளை மீறினால் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக் கமிட்டி ஒன்றின் முன் விசாரணை செய்யப்பட்டு அவர்களைத் தண்டிக்கவும் உரிமை வழங்கப்படுகிறது. சட்டத்தை உறுப்பினர்களே நீதிமன்றமாக இயங்கி தண்டனை வழங்குவது பொருத்தமற்ற செயலாகும் என்றும் திரு சிவசிதம்பரம் கூறினார்.

திரு சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கடந்த ஆட்சிக் காலத்தில் தம்மீது உரிமைப்பிரச்னை என்று கொண்டுவரப்பட்டு தமது அரசியல் வாழ்வுக்கு முற்றுப் புள்ளிவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று கூறியிருந்தார். திரு. ஜெயவர்த்தனவுக்கு எதிராக [illegible] ஒரு சட்டம் அமுலிலிருக்குமானால், அவரின் நிலை என்னவாக இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

(ம—இ)

### வருந்துகிறோம்

கடந்த இரவு ஏற்பட்ட மின்சாரத் தடை காரணமாக "ஈழநாடு" வெளியாவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எதிர்பாராத இத்தடங்கலுக்காக வருந்துகின்றோம்.

ஆ—ர்

## வாக்கெடுப்பின்றி நிறைவேறியது

[கொழும்பு]

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சார்பில் திரு. ஆர். பிரேமதாசாவினால் நேற்று முன் தினம் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பொது ஜன பாதுகாப்புச் சட்டம் நேற்று பேரவையில் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது

[ம—இ]

## பங்கீட்டுப் புத்தகங்களை மீளச் செல்லுபடியாக்கல்:

### மீண்டும் மனுச் செய்யலாம்

[யாழ்ப்பாணம்]

அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை மீளப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாக மேலும் விளக்கங்கள் தெரிவிக்கவும் பும் பாவனையாளர்கள் தங்கள் பகுதி அரசாங்க அதிபர்களுக்கு எழுத்து மூலம் கோரிக்கை மனுக்களை அனுப்பலாம்.

இத்தகைய விண்ணப்பங்கள் மார்ச் மாதம் 26ம் திகதிக்கு முன்னர் கவனிக்கப்படவேண்டுமென உணவு கூட்டுறவு அமைச்சர் திரு எச் பி ஹேரத் பணிப்புரை விடுத்துள்ளார்.

[இ

யாழ். மாநகரசபை ஊழியர்கள்

## காலை 6 மணிக்கே வேலைநிறுத்தத்தில் குதித்தனர்

[யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையை சேர்ந்த ஊழியர்களில் ஒருபகுதியினர் 21 கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் காலை 6 மணிக்கு வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர்.

யாழ் மாநகரசபைக்குமுன் மேயர் துரையப்பாவின் உருவச்சிலைக்கு எதிரில், வீதியோரத்தில், கூடாரங்கள் அமைத்து தொழிலாளர்கள் அமைதியாக அமர்ந்து வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தார்கள்.

இவ்வேலை நிறுத்தத்தில், பெண் தொழிலாளர்களும் பங்கு பற்றினர்கள்,

மின்சாரப் பகுதி சுகாதாரப் பகுதி, தண்ணீர்ப் பகுதி, மராமத்துப் பகுதி, வெளிக்களப்

[6ம் பக்கம் பார்க்க]

## பேச்சுவார்த்தைக்கு ஆணையாளர் நிபந்தனை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபை தொழிலாளரில் ஒரு பகுதியினரின் வேலை நிறுத்தத்தினால் வரியிறுப்பாளர்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை, தொடர்ந்து வரியிறுப்பாளரும் பொதுமக்களும் பாதிக்காதபடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி 14-ம் வாட்டில் சிகிச்சை பெற்று வரும், யாழ். மாநகரசபை விசேட ஆணை

[6-ம் பக்கம் பார்க்க]


## தேவை

பத்துத் தொன் பீட்றூட் உடன் தேவை;
நேரில் தொடர்புகொள்க:

வி. அரியரத்தினம்

முருகன் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்,
இல. 6, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 3385


சன்சோனிக் கமிஷன் முன சாட்சியமளிக்க

# 'அமிர்' யாழ்; கோப்பாய் எம். பிக்களுக்கு அழைப்பு

[யாழ்ப்பாணம்]

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணத் தொகுதி எம். பி. திரு. எஸ். யோகேஸ்வரன், கோப்பாய் எம். பி. திரு கதிரவேற்பிள்ளை ஆகியோருக்கு 'சன்சோனி' கமிஷன்முன் சாட்சியமளிப்பதற்கான அழைப்பாணைகளை கமிஷன் அனுப்பி வைத்துள்ளது.

கடந்த ஆவணி 13-ம் திகதி முதல் ஐப்பசி 15-ம் திகதிவரை நாட்டில் நடந்த அசம்பாவிதங்கள் பற்றி விசாரிக்கும்முகமாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இக்கமிஷனுக்கு முன்னாள் உயர்நீதிமன்றப் பிரதம நீதிபதி திரு. எம். ஸி. சன்சோனி தலைவராக உள்ளார், இவருக்குத் துணையாகப்பதில் சொலிட்டர் ஜெனரல் திரு. ஜி.பி.எஸ் டி சில்வா, சிரேஷ்ட அரச சட்டத்தரணி திரு. சரத் சில்வா ஆகியோர் விசாரணைகளில் உதவிபுரிவர்.

இக்கமிஷன் காரியதரிசியாக திரு. திஸ்ஸ தேவேந்திரா கடமையாற்றுவார். இவருக்கு உதவியாக திரு ரஞ்சித் கனகசுந்தரம் இருப்பார். காரியதரிசி வரமுடியாத நாட்களில் திரு கனகசுந்தரமே அவரது கடமைகளைச்செய்வார்.

இக்கமிஷன் எதிர்வரும் மாசி எட்டாம் திகதி முதல் யாழ். பொதுசன நூல்நிலைய கேட்போர் கூடத்தில் காலை 9-30 மணிமுதல் பிற்பகல் 1-30 மணிவரை விசாரணைகளை நடத்தும். ஞாயிற்றுக் கிழமைகளில் விசாரணைகள் நடைபெறாது.

இதுவரை சுமார் 2000 பேர் சாட்சியமளிப்பதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவற்றுள் சுமார் 300 விண்ணப்பங்கள் யாழ்ப்பாண விலாசத்தைக்கொண்டுள்ள போதிலும் யாழ்ப்பாணத்துக்கு வெளியே நிகழ்ந்துள்ள சம்பவங்கள் பற்றியே இவர்கள் சாட்சியமளிப்பர். யாழ்ப்பாணத்தில் வைத்தே இவர்களின் சாட்சியங்கள் பதியப்படவுள்ளன.

தமிழில் அளிக்கப்படும் சாட்சியங்கள் பின்னர் கமிஷனர் காரியாலயத்தினால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படலாமென நம்பப்படுகிறது.

மாசி எட்டாம் திகதி எம். பி க்கள் மூவரினதும் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்ட பின் மாசி 9-ம் திகதி முதல்

[6ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மருதனைமடம் ரோட்டில் 20 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குள்ளது. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 8243, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8243

எஞ்ஜின் முழுக்குச் சிறந்த ஒலிவ் ஸ்ஞானப்பவுடர் தலையில் உள்ள அழுக்கு பேன், பிசான், சொடுகு ஆகியவற்றை நீக்குகின்றது. வாங்கி உபயோகியுங்கள் ஓர் மில்க்வைற் தயாரிப்பு 8361

நீராவியடி பிறவுண் ரோட்டில் 3 பரப்பு காணியும் புதிய வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு Dr. ப. விக்னேஸ்வரன், பிறவுண்ரோட், யாழ்ப்பாணம். 8372

சிறந்த இன செவ்விளநீர்த் தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். 8383

### பயிற்சி

3 மாத விசேட A. M. I. M. I. [London] பரீட்சைக்கு சமனான மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-02-1978ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு: அதிபர், இன்ஸ்ரிரியூட் ஒப் எஞ்ஜினியரிங் ரெக்னோலொஜி. 11/B ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 8374

### WANTED

Wanted Photographer with experience in retouching and finishing. apply with certificats: Jothieeswara Studio Nelliady Karaveddy. 837.


# செய்திச் சுருக்கம்

### மீண்டும் ட்ரொலி பஸ்கள்

[கொழும்பு]
ட்ரொலி பஸ்கள் மீண்டும் கொழும்பில் சேவையில் ஈடுபடுத்தப்படலாம்.

பொருளாதார ரீதியில் சாத்தியமானதாயின் கொழும்புப்பகுதியில் மின்சாரத்தினால் இயக்கப்படும் இந்தபஸ் சேவை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனத்தெரிகிறது.

### உல்லாசப் பயணிகள் அதிகரிப்பு

[மன்னார்]
இலங்கை — இந்திய கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதனைத் தொடர்ந்து இலங்கைக்குப் பெருந்தொகையான உல்லாசப்பயணிகள் வரத் தொடங்கியுள்ளனர்.

### தூதர் — 'தேவா' சந்திப்பு

[கொழும்பு]
அமெரிக்கத் தூதுவர் திரு. ஹேவார்ட் ரிக்கின்ஸ் நீதியமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகத்தைச் சந்தித்து உரையாடினார்.

### லஞ்சம் கொடுக்க முயன்றனராம்

(கொழும்பு)
தெல்தெனியா எம். பீ. திரு. காமினி ராஜபக்ஸாவுக்கு 1500ரூபா லஞ்சம் கொடுக்க முயன்றதாக சந்தேகத்தின் பேரில் கிராம சேவையாளர் ஒருவரையும் பதில் தலைமை ஆசிரியர் ஒருவரையும் லஞ்சக்கமிஷனர் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

### சுகாதாரச் சட்டங்கள்

(கொழும்பு)
பல காலமாக நடைமுறையில் இருந்து வரும் சுகாதாரச் சட்டங்களைச் சீரமைப்பதெனவும் புதிய சட்டங்களைப் புகுத்துவதெனவும் சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் தொழிலாளர்களை ஒன்று திரட்டி ஊர்வலத்தில் வழிநடத்தும் குறிக்கோளுடனும் அவர்களின் ஒன்றுபட்ட ஐக்கியத்தின் மூலம தொழிலாளர் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் நோக்கத்துடனும் தொழிலாளர் பேரணி ஒன்று இன்று நல்லூரில் அங்குரார்ப்


## சன்சயின்
## அழகு பார் சோப்

இன்றே கேட்டு வாங்குங்கள்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி


## நித்திரையில் குத்திக்கொலை

[கந்தளாய்]
ஹெட்டிப் பொலயைச் சேர்ந்த ஆர். எச் சிறிசேன (26 வயது) என்பவர் வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கையில் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டார்.

மர்மக்கொலைஞனைப் பொலிசார் தேடுகின்றனர் [உ]


## இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் பயிற்சி நிலையம்

**வகுப்புகள்:-** G A.Q., G.S.Q., First in Commerce B. A., B. com.

**நடைபெறும் இடங்கள்:-** யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டுநகர்.

**தகைமைகள்:** (I) G. C. E A/L நான்கு பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.
(II) 25 வயதிற்கு மேற்பட்டோர் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 2-2-78**

**புதிய வகுப்புகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 4-2-78.**

புதிதாக பதிய விரும்பும் மாணவர்கள் பாடங்கள் பற்றிய விபரத்தையும் பதிவு அனுமதிப் பத்திரத்தையும் முத்திரையிட்ட சுயமுகவரி கொண்ட 9'' X 4'' தபால் உறை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பர இல 1000,
C/o, ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.



சாவகச்சேரி நகரசபை

## பதிவேட்டுக் காப்பாளரும் புத்தகம் கட்டுபவருமான பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளரால் 10-02-78ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பதிவேட்டு காப்பாளரும் புத்தகம் கட்டுபவருமான பதவி' எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்டிருத்தல்வேண்டும்:—

1. 10-02-78ம் திகதி 18 வயதுக்குக் குறையாமலும், 35 வயதிற்கு மேற்படாலும் இருத்தல்வேண்டும்.
2. நன்னடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
3. சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
4. புத்தகம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று (3) வருட அனுபவம் பெற்றுஇருத்தல் வேண்டும்.
5. நகரசபை எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி பதவிக்கான வேதனக் கிரமம் ரூபா 2400-60/12-3120/- வருடாந்தம் ஆகும்.

இப்பதவிக்கான நியமனம் நிரந்தரமானதும் இளைப்பாறுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும்.

விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சையின்போது, பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ், புத்தகம் கட்டும் வேலையைப் பற்றிய அனுபவச் சான்றிதழ், வேறு நற்சாட்சிப் பத்திரங்களின் மூலப் பிரதிகள் சமர்ப்பிக்க ஆயத்தமாக இருத்தல்வேண்டும். புத்தகம் கட்டும் பணியில் ஒரு செய்முறைப் பரீட்சையும் நடாத்தப்படும். அதற்குத் தேவையான உபகரணங்களும் கேட்கும்போது கொண்டு வருதல்வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் காலத்திற்குக் காலம் சபையால் விடுக்கப்படும் பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமைவாக நடத்தல்வேண்டும்.

தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் சபையால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட உத்தரவாத முறியை சமர்ப்பிப்பதற்கு அல்லது காசாகச் செலுத்துவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

த. நவரத்தினராசா
விசேட ஆணையாளர்,
நகர சபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
30-01-78 8380


நல்லூரில்

## தொழிலாளர் பேரணி இன்று அங்குரார்ப்பணம்

பணம் செய்து வைக்கப்படவுள்ளது. சுருட்டுத்தொழிலாளர் உட்பட சகல தொழிலாளர்களையும் இந்தப்பேரணி உறுப்பினராகக் கொண்டு இயங்குவதுடன் ஏனைய தொழிலாள இயக்கங்களுடன் இணைந்தும் செயல்படும் என்று இவ்வணியின் அமைப்பாளரும் யாழ். மாநகரசபை முன்னாள் உதவி மேயரும் அகில இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தலைவருமான திரு ஆ. துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனமண்டபத்தில் இன்று மாலை நடைபெறும் சுருட்டுத் தொழிலாளர் சங்கப்பிரதிநிதிகள் மகாநாட்டில் இத் தொழிலாளர் பேரணி அங்குரார்ப்பணம் நடைபெறும்.

சுருட்டுத்தொழிலாளரின் சம்பளஉயர்வு சம்பந்தமாக ஒருமுடிவு எடுக்குமுகமாக இம்மாநாடு கூட்டப்படுகிறது.

சுருட்டுத்தொழிலாளர்கள் சம்பளம் உயர்த்தப்படும் போதெல்லாம் சரியான கூலிகளை முன்பெல்லாம் சுருட்டுத் தொழிலாளர்கள் பெற்றுர்களா என்பது சந்தேகமே என்றும் தற்சமயமுள்ள நிலைமையில் சுருட்டுத் தொழிலாளர்களின் மாதவருமானம் 175 ரூபாய் கூடச் சிலருக்குக் கிடைப்பது கஷ்டமென்றும் மாதச் சம்பளம்பெறும் தொழிலாளர்களைப் போல வேலை செய்யா நாட்களிலும் சுருட்டுத் தொழிலாளர்கள் சம்பளம் பெறமுடியாதென்றும் மாதத்தில் 20 நாட்களுக்குத் தானும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பது துர்லபம் என்றும் கூறிய திரு. துரைராஜசிங்கம் தற்சமயமுள்ள சட்டப்படி முதலாளிகள் சேமலாபநிதி, பெருநாட்களுக்குச் சம்பளத்துடன் லீவு சட்டப்படி சம்பளம் 27.50 மாதம் இருமுறைசம்பளம் வழங்குவது பற்றி இன்றைய மாநாட்டில் வலியுறுத்தப்படுமென்றும் கூறினார். [அ]

''தெல். ப. நோ. கூ. ச.

## பொருளாதாரத்தைப் பெருக்க வகுத்துள்ள திட்டம் இது''

### — உதவி அரசாங்க அதிபர்

[தெல்லிப்பளை]
''அரசு மக்கள் முன்னேற்றம் கருதி பல அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துள்ளது. அவற்றை நாங்கள் சரிவரப் பயன்படுத்தவேண்டும். தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் இப்பகுதி மக்களின் பொருளாதாரவளத்தைப் பெருக்க ஊக்குவிக்கவும், படித்த வேலையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கவும், பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டுள்ளது.''

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவரும், வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபருமான திரு. க. மகாதேவா மேற்படி சங்கத்தால் கோழிப் பண்ணை வளர்ப்பு ஆரம்பப் பயிற்சியை தெல்லிப்பளை ப. நோ. கூ. ச. மேல்மாடியில் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சங்கப் பொதுமுகாமையாளர் திரு. நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:—''எமது சங்க அங்கத்தவர்களுக்கு பல வழிகளிலுமிருந்து வருவா

(5-ம் பக்கம் பார்க்க)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல. M. B. 10851

1. வெள்ளையப்பா கைம்பெண் செல்லம்மா.
2. வெள்ளையப்பா தம்பிராசா.
3. வெள்ளையப்பா மகள் நேசமலர்- எல்லோரும் உடுவில். —வழக்காளிகள்

எதிராக

1. இளையவன் சின்னத்தம்பியும் பெண் இறந்துவிட்டார்.
2. தங்கப்பிள்ளையும்.
3. சின்னத்தம்பி இராசகிளி-மல்வம் உடுவில். 3ம் எதிராளி இறந்த 2ம்எதிராளியின் சொத்துக்களின் சட்டப்பிரதிநிதியாக

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் MB 10851ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978ம் ஆண்டு மாசி மாதம் 24ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி (24-2-78) தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 873-00 சதம் மேலும் ரூபா 500/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 8 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1967ம் ஆண்டு ஆனிமாதம் 2ம் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1970ம் ஆண்டு ஆனி மாதம் 21ம் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 348-95 கொடுக்க வேண்டியிருப்பதாலும் இதில் எதிராளிகள் வழக்காளிக்கு ரூபா 500/-ம் 19-8-70ல் செலவு தொகையின் ஒரு பகுதிப் பணமாக கொடுத்த ரூபா 75/-ம் கழிபடல் வேண்டும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று சுன்னாகம் இறை. ''தென்டன் தோட்டம்'' நிலப்பரப்பு 1குளி 13ம் வீடுகளும் செய்பயிர் வான்பயிர்களும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இந்த நில. பர 1ம் குளி பதின்மூன்றுக்கும் எல்லை கிழக்கு கையொழுங்கை வடக்கு கையொழுங்கையும் காத்தி பெண் தங்கம்மாவின் ஆதனமும். மேற்கும் தெற்கும் ஒழுங்கை இதில் குறித்த வீடுகளில் கிழக்குப்புறமாகவிருக்கும் வீடு நிந்தமாகவும் மற்றைய வீடுகள் புறநீங்கலாகவும் மிகுதி அடங்கலில் சொரியலாய் அரைவாசியும் அதற்குரியவைகளும்.

சி. செ. பாலசிங்கம்,
(கொமிஷனரும் விலைமதிப்பாளரும்)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
26-1-78 8358

ஈழநாடு
The Eelanaadu

## அமைச்சர் செய்வாரா?

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக பலவிதமான புகார்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

வடபகுதியைப் பொறுத்த வரை அரசியல் பழிவாங்கல் படுமோசமாக நடைபெற்றிருப்பதாக ஆசிரியர்களும், அரசியல் தலைவர்களும் புகார் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கக்கட்சியின் அமைப்பாளர்கள், தமது அரசியல்செல்வாக்கைப் பயன்படுத்தி சீராக நடந்துவந்த பல பாடசாலைகளின் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வித்துள்ளார்கள்என ஒருபிரிவினரும். தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் தமக்கு வேண்டாதவர்களையும், எதிராகச் செயல்பட்டவர்களையும் இடம் மாற்றம் செய்வித்து பழிதீர்த்துக் கொண்டார்கள் என இன்னொரு பிரிவினரும் குற்றஞ் சாட்டியுள்ளார்கள்.

கட்சி அரசியலுக்கு அமைப்பாளர் பதவிகள் அவசியமாக இருக்கலாம். ஆனால் ஒரு தொகுதியில் உள்ள ஒருகட்சியின் அமைப்பாளர்களைவிட அத்தொகுதியின் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் முக்கியமானவர். பெரும்பான்மை மக்களின் ஆதரவில் பேரவை உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள அவரது கருத்துக்கு மதிப்பு அளிப்பது அரசாங்கத்தின் கடமை.

அதேசமயம் அரசாங்கக் கட்சியின் வளர்ச்சிக்காக அக்கட்சியின் அமைப்பாளர்களின் கருத்துக்களையும் மதித்தே ஆகவேண்டிய நிலைமை இருக்கின்றது.

எதுவானாலும் 'பழிவாங்கல்' என்ற நிலைமைக்கு அரசாங்கம் உடந்தையாய் இருப்பது உகந்ததல்ல. கட்சியை வளர்ப்பதற்காக பழிவாங்கலில் இறங்குவதாயின் அது எந்தப்பிரிவினருக்கும் உதவப்போவதில்லை. மாருக வெறுப்பும், பகையுமே அதிகரிக்கும்.

இதேவேளையில் வடபகுதியில் நடைபெற்றுள்ள ஆசிரியர் இடமாற்றங்கள் பற்றி விசாரணை செய்ய தனிநபர் ஆணைக்குழுவொன்றை நியமிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் வடபகுதி அமைப்பாளர்கள் கல்வி அமைச்சரிடம் கோரியிருப்பதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

இந்தக்கோரிக்கைக்கு அரசு இணங்குமானல் பல ருசிகரமான தகவல்கள் வெளிவரக்கூடும்.

திரைமறைவில் நடந்த தில்லுமுல்லுகளும் அம்பலமாகும்

செய்வாரா கல்வி அமைச்சர்.

## "ஏழைகளுக்கு இலவச சிகிச்சை"

[அரியாலை]

இப்பகுதியில் வாழும் குடும்பப் பெண்களின் நலன்களைக் கவனிப்பதற்காக இளம் பெண்கள் கிறீஸ்தவ இயக்கத்தின் ஆதரவில் நடாத்தப்பட்ட இவ் வைத்திய சாலை இன்று முதல் குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் வைத்திய சோதனை செய்து மருந்து வழங்கும் வைத்தியசாலையாக மாற்றப்படுகிறது. இப்பகுதியில் வாழும் ஏழைமக்களுக்கு இவ்வைத்திய சாலையில் இலவசமாக மருந்துகள் வழங்கப்படும். அத்துடன் இந்த நிலயத்தில் போஷாக்கு உணவுவகைகளும் மருந்துவகைகளும் பால்மாவும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. என்று அரியாலை மேற்கு கலைமகள் வீதியில் குடும்பநல வைத்திய நிலையமொன்றைத் திறந்து வைத்த கொழும்பு இளம் பெண்கள் கிறிஸ்தவ இயக்கத்தின் பிரதிநிதி திருமதி கோடிப்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார்.

காந்தி சன சமூக நிலைய மாதர் சங்கத்தலைவி திருமதி. அ. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்: இளம்பெண்கள் கிறிஸ்தவ இயக்கத்தலைவி திருமதி யேசுதாசன் பேசுகையில் 'இப்பகுதியில் வாழும் ஏழைமக்களின் நல்வாழ்வுக்காக எமது இயக்கத்தின் சார்பில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இவைகளை இப்பகுதி மக்கள் நன்கு பயன்படுத்தி நன்மைபெற வேண்டும்'' என்றார்.

கலைமகள் ச. ச. நி. மாதர் சங்க உபதலைவி திருமதி நாகராசா, காந்தி ச. ச. நி. மாதர் சங்கச் செயலாளர் திருமதி சி. ஜீவானந்தம் ஆகியோரும் பேசினர். [அ]

# "கூட்டணிபற்றிய என்.எம். பேச்சு துவேஷத்தைக் கிளப்பும்"

## வி. பி. கவலை

(அரியாலை)

''சுதந்திரவர்த்தகவலயம் ஒன்றை அமைப்பதற்காக இரவோடு இரவாகச் சட்டங்களை நிறைவேற்றும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கேட்கும் தனிநாட்டையும் கொடுக்கலாம் என்று முன்னுள் நிதியமைச்சரும், அரசியல் வாதியுமான கலாநிதி என். எம். பெரேரா கூறிவருவது மிகவும் வருந்தத்தக்கதாகும். இது இந்நாட்டில் இனத்துவேஷத்தைக் கிளறும் பேச்சாகும். இது குறித்து இந்நாட்டில் வாழும் முற்போக்குவாதிகள் அதிருப்தியடையாமல் இருக்க முடியாது.''

இவ்வாறு செந்தமிழர் கழகப் பொதுச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம் திருநெல்வேலிக் கேணியடி மத்திய சனசமூக நிலைய கட்டிடத் திறப்பு விழாவில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இளைப்பாறிய நீதிபதி திரு. ரி. தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலம்தொடர்ந்து பேசுகையில், தமிழர் தம் சுயநிர்ணய உரிமைகளைத் தற்பொழுது மறந்து திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனதிபதி பதவியேற்றபின்னர் என்ன கிடைக்கப்போகிறது என்று ஆவலாக எதிர்பார்த்திருக்கிறார்கள்'' என்றார்.

விரிவுரையாளர் திரு. வன்னியசிங்கம் பேசுகையில், 'மலையகத்தில் வாழும் தமிழ் மக்களுடைய இன்னல்களுக்காக அனுதாபம் காட்டும் நாம் அவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்குச் செயல்படவேண்டும். கல்வி கற்று வேலைவாய்ப்பின்றி திசை தெரியாது அலையும் தமிழ் வாலிபர்கள் அரசாங்க உத்தியோக மோகத்தைக் கைவிட்டு நம் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கக் கூடிய ஆக்கபூர்வமான தொழில்களை மேற்கொள்ள முன்வரவேண்டும். பொருளாதாரவளம் பெருகினுல்தான் நாம் பூரண சுதந்திரம் பெற முடியும் என்றார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (அ)

ஆசிரியருக்குக் கடிதம்:

# திருக்கேதீச்சரத்தில் ஓர் அன்பு இல்லம்

எமது சமுதாயம் இன்று எல்லாவகையிலும் தாய் இல்லாப் பிள்ளைபோல் இருந்து வருகின்றது. கணவனைப் பிரிந்த இழந்த திக்கற்றோரை ஆதரிக்க இடம் இல்லை. இதனுல் பலர் தற்கொலைசெய்கின்றனர். வாழ்க்கையைத் துறந்து சமூகப்பணி செய்பவர்களையோ அல்லது அதற்காகத் தியாகம்செய்பவர்களையோ ஆதரிக்க இயக்கமில்லை. ஆரம்பிக்கமுன்னர் இப்படி எத்தனைபேர் வருவார்கள் என எண்ணி கலங்குகின்றோமோ தவிர செய்து முடிக்க முன்வருவாரில்லை. சைவஅதினர்களோ, சைவஸ்தாபனங்களோ விழாக்களுடனும் குருபூசைகளுடனும் மட்டும்தான் நின்று விடுகின்றன. இன்று இந்து மதத்தின் பெயரால் இயங்கும் அநாதை இல்லங்கள், ஆச்சிரமங்கள், பொதுஸ்தாபனங்கள் ஒருவர் இருவரிலேதான் தங்கியுள்ளன. அவர்களுடன் சேவையும் நின்றுவிடும்போல் இருக்கின்றது. கதிர்காமம், முனீஸ்வரம் இப்படி ஒன்றன்பின் ஒன்றாகப் பறிகொடுத்து வந்துவிட்டோம். திருக்கோணேஸ்வரமும் இந்தநிலையில்தான் கருதவேண்டியுள்ளது.

இன்னும் கைபடாமல் இருந்துவருவது திருக்கேதீஸ்வரம் ஆகும். நாம் பராமுகமாக இருந்தால் இன்னும் பத்தாண்டுகளில் எமது ஆதிக்கம் அங்கு செல்லுபடியாகாமல் போகலாம். திருக்கேதீஸ்வரம் வளர்ந்து சைவமக்களுக்கு ஒளிகொடுக்கவேண்டுமாயின் ஆலயத்தை சைவச் சூழ்நிலையில் வளர்க்கவேண்டும். பலன் கருதாத தொண்டர்கள் அங்கு சுற்றாடலில் குடியேறவேண்டும். சைவப் பொதுஅமைப்புக்கள் அமைக்கப்படவேண்டும். திருவிழாக்கள், மகாசிவராத்திரிகாலங்களில் மட்டும்தான் வணங்கி வந்தால் சைவச்சூழ்நிலையில் ஆலயம் வளரமாட்டாது. சைவப்பொது அமைப்புக்களுக்கு அங்கு நிறைய வேலைகள் உண்டு. ஏராளமான பணிகள் அங்கு தேங்கிக்கிடக்கின்றன. ஆலயத்தின் சுத்தம், பூந்தோட்டம், கூட்டுப் பிரார்த்தனை மற்றும் சரியை வழிபாடுகளைக் கவனிக்கமுடியும். திருக்கேதீச்சரம் என்னும் பெயரில் தபால்நிலையம், புகையிரதநிலயம் இப்படி எல்லாம் சிறப்பாக அமைத்துள்ள திருப்பணிச்சபையாரின் புனித எண்ணம் மேலோங்க வேண்டுமாயின் சைவமக்கள் அனைவரும் இதனைப்பற்றி சிறிது சிந்திக்குமாறு தயவாகவேண்டுகின்றேன்.

திருக்கேதீச்சரப்பெருமானின் திருவருளை முன்வைத்து பல அன்பர்களின் ஆதரவினுல் நாம் அங்கு பாலாவிக் கரையில் தற்போது முடிவுபெருத கட்டிடமொன்றினைப் பொறுப்பெடுத்து, புனரமைத்து அன்புஇல்லம் என்னும் பெயரில் பணிசெய்ய விரும்புகின்றோம். இது திக்கற்றோருக்கு உறைவிடமாக விளங்கும். அத்துடன் தொழில்வசதிகளும் செய்து கொடுக்கப்படும். எமது பணியைத் தொடர வசதியாக இருக்கும். இவ் இல்லம் அமைக்க முன்னேடியாகத் திகழும் திருக்கேதீச்சர திருப்பணிச்சபையின் செயலாளர் திரு. ஆர். நமசிவாயம், நிதி பொறுப்பாளர் திரு. எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் எமது நன்றிக்குரியவர்கள்.

ஆ. கந்தையா.

சைவஅநாதை இல்லம்,
கைதடி.

# மும்மொழியில் நிகழ்ந்த ஆண்டகை அபிஷேகம்

[கொழும்பு]

''அத்தியட்சகர் மக்களாலே தெரிவு செய்யப்பட்டாலும் இவர் தேவனுலே நியமிக்கப்படுகிறார். அத்தியட்சகர் அணியும் சிவப்பான அங்கியை நாங்கள் மேன்மையான அங்கியாக மதிக்கிறோம். ஆனுல் எமது இறைவனுகிய கிறிஸ்துவுக்கு சிவப்பான அங்கியை வேடிக்கைக்காக அவர்கள் அணிந்தார்கள். கொலைஞர்களால் அணிவிக்கப்பட்ட அந்தச் சிவப்பான அங்கியை ஆண்டவன் மகிமையின் சின்னமாக ஏற்றுக்கொண்டார். அதுபோல இன்று பட்டாபிஷேகம்பெறும் அத்தியட்சகரும் இப்பதவியைத் தன்னுடைய பெருமைக்கோ, மகிமைக்கோ உபயோகிக்காமல் கிறிஸ்துவின் சின்னமாக விளங்கவேண்டும்.''

இவ்வாறு கொள்ளுப்பிட்டி மீகாவெல் ஆலயப் பங்குக்குரவர் அருட்திரு யே. இரத்தினநாயகம் கொழும்புவாழும் மீட்பர் கிறிஸ்துபெருமானின் பேராலயத்தில் நடைபெற்ற கொழும்பு அத்தியட்சாதீன ஆயராக அபிஷேகம் பெற்ற ஆண்டகை சுவீதுன் பெர்னண்டோவின் அபிஷேக ஆராதனையின்போது பேசுகையில் குறிப்பிட்டார்;

இவ்வாராதனையில் கன்ரபரி அத்தியட்சாதீனப் பிரதிநிதி ஆண்டகை சிறில்அபயநாயகா தலைமையில் குருநாகல் அத்தியட்சாதீன ஆண்டகை லக்ஷ்மன் விக்கிரமசிங்கா மேற்கு மலேசியா அத்தியட்சாதீன ஆண்டகை யோன்சவிரிமுத்து, கொழும்பு அத்தியட்சாதீனத்தின் 8வது ஆண்டகை கிராம் காம்பெல், இலங்கை தென்னிந்திய திருச்சபைஆண்டகை யே. அம்பலவாணர் ஆகியோர் பங்கெடுத்தனர்.

மும்மொழிகளிலும் நடைபெற்ற மேற்படி ஆராதனையில் ஆரம்ப ஆராதனையை ஆண்டகை கிராம் காம்பெல் நடாத்தினர்.

பிரதம அத்தியட்சகருக்குப் புதிய அத்தியட்சகர் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து அவர் வாக்குப்பிரமாணம் செய்தார்.

யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் வணக்கத்துக்குரிய யே. யே. ஞானம்பிரகாசம் குருமார்கள் சார்பிலும், அத்தியட்சாதீனப் பதிவாளர் சபைகளின் சார்பிலும் புதியஆயரை வரவேற்றுப் பேசினர்;

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் புதிய ஆயருக்கு வாழ்த்துத் தெரிவித்து தந்தியொன்றை அனுப்பியிருந்தார்.

[அரியாலை நிரு: உ]

(கொழும்பு)

''மகாவலி திசைதிருப்புத் திட்டம் பூர்த்தியாகும் போது சுமார் ஒருலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகிடைக்கும்'' என்று பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினர்.

மகாவலி நீரைத் திசை திருப்புவது தொடர்பான புதிய திட்டத்தின் முதல் கட்ட வேலைகளை ஆரம்பித்து வைத்துப்பேசுகையிலேயே பிரதமர் இவ்வாறு சொன்னர். [உ]

## ஆலய புனருத்தாரணம்

(காரணவாய்)

பொலிகண்டி கந்தவனநாதர் ஆலய புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகிறது.

ஆலய விக்கிரகங்கள் யாவும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பூஜைகள் ஒரே இடத்தில் நிகழ்கின்றன. ஆலய புனருத்தாரண வேலைகள் இவ்வாண்டு இறுதியளவில் முடிவடைந்து கும்பாபிஷேகம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

## மணிவாக்கு

கொலை, விபச்சாரம், கொள்ளை, முதலியன ஒரு சிலரைத்தான் அழிக்கின்றன; ஆனுல் ஒரு சிலருடைய ஆடம்பரவாழ்க்கை எத்தனையோ ஏழை மக்களின் அமைதியான வாழ்க்கையைப் பாழ்படுத்தி அல்லல் விளைவிக்கின்றது.

—மு. வரதராஜன்

திவுப்பகுதியில்

# காளான் வளர்ப்பு முறை பரீட்சார்த்தம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் காளான் வளர்ப்பு முறையை பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்த தீவுப்பகுதி போதனுசிரியர் திரு. எஸ். சிவக்கொழுந்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

வர்த்தக சந்தைகளில் மிக உன்னதமான ஏற்றுமதிப் பாரம்பரியமான காளான் செய்கைமூலம் ருத்தல் ஒன்றுக்கு ரூபா 18 முதல் 20 வரை சம்பாதிக்க முடியும் என அவர் தெரிவித்தார்:

இந்த லாபகரமான காளான் வளர்ப்பு முறை நன்னீருள்ள இடங்களில் வைக்கோல் கற்றைகளை பிரயோகித்து வளர்ப்பதற்கு தீவுப்பகுதி இளைஞர் விவசாயக்கழக உறுப்பினர்கள் ஈடுபடவேண்டும் என அவர் கோரியுள்ளார். காளான் விதைகளை வேண்டுவோர் உடனடியாக தம்மிடம் தொடர்பு கொள்ளுமாறும் தாம் அவர்களுக்கு விதைகளை விவசாய திணைக்களம்மூலம் வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் கூறினர். (தெ-உ)

மத்திய கிழக்கு விவகாரம்

# இஸ்ரேலின் விடாப்பிடியான போக்கினால் சிக்கல்

## யூகோ. அதிபர் கவலை

பெல்கிரேட், ஜன. 31

மத்தியகிழக்கு விவகாரத்தில் இஸ்ரேல் விடாப்பிடியான போக்கினைக் கையாள்கிறது என்று யூகோஸ்லேவிய ஜனாதிபதி மார்ஷல்டிட்டோ ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின்விடாப்பிடியான போக்கு மத்திய கிழக்கு விவகாரத்தில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளதென்றும் மார்ஷல் டிட்டோ கூறினார்.

இது இவ்வாறு இருக்க, எகிப்து, இஸ்ரேலியஇராணுவ இணைப்புக்குழுக்கூட்டம் இப்போது நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் இஸ்ரேலிய வைஸ்மனும் கலந்து கொள்ளு பாதுகாப்பு அமைச்சர் திரு. வார். (உ)

# தோட்டப்பாடசாலைகள் புறக்கணிப்பு?

[இரத்தினபுரி]

கடந்த அரசாங்கத்தால் பொறுப்பேற்கப் பட்ட பல தோட்டப் பாடசாலைகளில் மாணவர்களின் வரவுக்கேற்ப இதுவரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. சில பாடசாலைகள் 1977-ம் ஆண்டு ஆவணிமாதம் ஏற்பட்ட கலவரத்தின் பின்னர் இதுவரை திறக்கப்படவில்லை.

அரசாங்க பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவருக்கு வழங்கப்படும் மதிய உணவுக்கான 'பிஸ்கட்' இந்தவகையான பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு இதுவரை வழங்கப்படவில்லையென்றும் இது குறித்துப் பெற்றோர் கவலை கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. [அரி-நி அ]

# "கிராமப்புறங்களை வளமாக்க தமிழக அரசு பாடுபடும்"

## அமைச்சர் எட்மண்ட் உறுதி

சென்னை, ஜன. 31

"கிராமப்புறங்களை வளமாக்கி, கிராமப்புறமக்களுக்குத் தொழில்வாய்ப்பு அளிப்பது தமிழக அரசின் முக்கியகொள்கைகளில் ஒன்றாகும்" என்று தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு. எட்மண்ட் உதகமண்டலத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

"கிராமப்புறமக்கள் பட்டணத்தை நாடிவரும் நிலை இதனால் நீங்கும்" என்றும அமைச்சர் சொன்னார்.

தமிழக அரசு மற்றத்துறைகளில் ஆர்வம் காட்டுகின்ற அதேவேளை வேலையற்றுத் துன்பமுறும் மக்களின் நல்வாழ்வுக்காகவும் பல நல்ல திட்டங்களைத் தீவிரமாகச் செயற்படுத்தி வருகிறது" என்றார் அமைச்சர். (உ)

# கடலாடுவிழா கொண்டாடுவர்

(யாழ்ப்பாணம்)

குருநகர் இளைஞர் கலைக் கழகத்தினர் கடலாடுவிழா கொண்டாடவுள்ளனர். தமது கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவை யொட்டி பலகலைநிகழ்ச்சிகளும் விளையாட்டுப்போட்டிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டரீதியில் நடைபெறும் கரபந்தாட்ட நிகழ்ச்சியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 3-ம், 4-ம், 5-ம் திகதிகளில் குருநகர்கலையரங்கில் நடைபெறும் இவ்விழாவில் "சமயம் வாழ்க்கையை நெறிப்படுத்துகிறதா? இல்லையா" என்றபொருளில் பட்டிமன்றமொன்றும் "நெஞ்சம் மறவாக் கடலோரம்" "கடலாடு கரைதனிலே கலைகளாட

(5-ம் பக்கம் பார்க்க)

ஐ. பொருளாதார சமூக நாடுகளுடன்

# சீனு வர்த்தக உடன்படிக்கை

பீக்கிங், ஜன. 31

சீனு ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளுடன் 5 ஆண்டு அடிப்படையில்வர்த்தக உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொள்ளவிருக்கிறது.

இதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

இந்த பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற்று உடன்படிக்கை உருவாகும் பட்சத்தில் ஐரோப்பிய பொருளாதார சமூகநாடுகளுடன்உடன்படிக்கைசெய்து கொண்ட முதல் சோஷலிஸ நாடாக சீனு இருக்கும். (உ)

"ஒற்றுமை விரும்பும் அரசு

# இனங்களின் சமத்துவத்தை அங்கீகரிக்கவேண்டும்"

—வி. பி.

[யாழ்ப்பாணம்]

"ஒன்பதாம் நூற்றுண்டில் துணைக்கண்டத்துக்குள் நுழைந்த இஸ்லாமியர் நிலைபெற்று தமக்கே உரிய நாகரிகப் பண்புகளை இந்தியாவில் வளர்த்து இன்று இந்திய நாகரிகத்தின் சகலதுறைகளிலும் இஸ்லாத்தின் முத்திரையைப் பதித்துள்ளனர்" என்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றஇக்பால் நூற்றுண்டு நினைவு தினக் கூட்டத்தில் செந்தமிழர் இயக்கச்செயலாளரும் கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகருமான திரு. வி.பொன்னம்பலம் பேசுகையில்கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "இந்தியாவுக்குள்அந்நியராக வந்த இஸ்லாமியரை சந்தேகக் கண்கொண்டு இந்துக்கள் நோக்கினர்.

"இஸ்லாமிய நாகரிகத்தின் மிக உயர்ந்த சின்னமாகவிளங்கிய இக்பால் மனிதத்துவம், ஆத்மீகம, தத்துவம் போன்ற உயர் பண்புகள் அனைத்தையும் இணைத்த ஓர் மாபெருங்கவிஞர்.

### மறுப்பு

"வெளியிலிருந்து வந்தவர்கள், அந்நியர்கள் என்ற காரணத்தால் இந்துக்கள், இஸ்லாமியருக்கு சமத்துவம்தர மறுத்தனர். அதற்கு அவர்கள் பெற்றுக்கொண்ட சன்மானம்தான் நாட்டுப்பிரிவினை. இதுஇந்திய வரலாறு கற்பிக்கும் பாடம். ஆனால் இந்தியாவுக்கு மட்டும் உரிய பாடமல்ல. ஐக்கியத்தை நாடி நிற்கும் அரசாங்கமோ, அரசியல்கட்சிகளோ இனங்களின் சமத்துவத்தையும், தனித்துவத்தையும்அங்கீகரிக்க வேண்டும்.

### அடிமைகளா?

இலங்கையில் வெளியிலிருந்து வந்தவர்களாகியதமிழர்களை, முன்னமோ அல்லது சமகாலத்திலோ வந்தவர்களால் இவர்கள் கூலிகள், அடிமைகள் என்று வர்ணிக்கப்பட்டால் இந்தியா பெற்றுக்கொண்ட கசப்பான பாடத்தை இலங்கையும் கற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்' பண்புகள் பலவாகப்பெருகி, இனங்கள் புலவாக வளர்வது ஐக்கியத்திற்கு எதிரல்ல.

"மாறுபாட்டில் இணைப்புக்கான இரண்டு தரப்பட்ட ஓர் மாமந்திரமே இனச்சமத்துவம்" என்றார். [கூ-உ]

# பிரஞ்சுமொழி வகுப்பில் சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரெஞ்சு நட்புறவுச் சங்கம்நடத்தியமாலைநேர பிரெஞ்சு மொழி வகுப்பில் பின் வருவோர் முதற்பிரிவில் சித்தியடைந்துள்ளனர். முதலாம் பகுதி லட்சுமி சிவலிங்கம், ஏ.எல்.எம். அன்ரனிப்பிள்ளை, கே. சந்திரதேவன், ரி. சிவானந்தராஜா, இன்பஜோதி மனுவல்பிள்ளை.

இரண்டாம் பகுதி-பத்மா செல்வநாயகம், பூமணி கனகராஜா. சுவிஸ்ரு ஜெயராசா, செபஸ்தியாம்பிள்ளை அன்ரனிப்பிள்ளை, அனமெல் ஜெயராசா, லங்கா நேசையா. (கே-அ)

•••

# நாடு திரும்பினர்


(கொழும்பு)

தென்கொரியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வெளிநாட்டமைச்சர் ஜனுப் ஹமீத் நேற்று நாடு திரும்பினர். (உ)

இப்போது மென்மையான, செம்மையான, இதமான அநேகம் க்ஷவரங்கள் எடுப்பதற்கு

கிளாஸிக் பிளேட்

(பொலிமர் பூசிய ஸ்டெய்ன்லஸ் உருக்கு)




விநியோகத்தர்கள்: ஹவுஸ் அண்ட் புரொபர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்

RAVI

# பிரான்ஸ் உதைபந்தாட்ட கோஷ்டி யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

உலக நாடுகளிடையே உதைபந்தாட்டப் போட்டியில் பிரசித்தி பெற்று விளங்கும் பிரான்ஸ் நாட்டுத் தேசிய உதைபந்தாட்டக் கோஷ்டி இம்மாதம் 12ம் திகதி யாழ். நகர் வருகின்றது.

இம்மாத முற்பகுதியில் இலங்கைக்குவரும் இந்த பிரான்ஸ் உதைபந்தாட்டக் கோஷ்டி இலங்கையில் பல சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொள்ள இருக்கின்றது.

நீண்டகால இடைவெளியின்பின் யாழ். நகர்வரும் வெளிநாட்டுக் கோஷ்டி இது என்பது குறிப்பிடத்தக்கது. பலம்வாய்ந்த இந்த பிரான்ஸ் உதைபந்தாட்டக் கோஷ்டியில் உலகப் பிரசித்தி பெற்ற பல உதைபந்தாட்ட வீரர்கள் அங்கம்வகிக்கின்றார்கள்.

யாழ் மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். நகர்வரும், பிரான்ஸ் கோஷ்டியுடன் மோதுவதற்காக, கிளிநொச்சி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள சிறந்த உதைபந்தாட்ட வீரர்கள் அடங்கிய 'யாழ். மாவட்டத் தெரிவுக் கோஷ்டி ஒன்று தெரிவு செய்யப்படவுள்ளது.

இக்கோஷ்டியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சி இம்மாதம் 8-ம் திகதி தொடக்கம் 11 ம் திகதிவரை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. ஈ. கே. குமரையா மேற்கொண்டுள்ளார். [உ]

## ஆசிரியர் குத்திக்கொலை

[வாதுவ]

யோசெப் கூரே என்ற ஆசிரியர் ஒருவர் கத்தியால் குத்திக்கொலைசெய்யப்பட்ட சம்பவம் ஒன்று வாதுவையில் நடைபெற்றுள்ளது.

நீரோடையில் இவரது சடலம் வீசப்பட்டிருந்தது.

பொலிசார் விசாரணை நடத்துகின்றனர். [உ]

## கனகரின் நலம் வேண்டும் ஐ. தே. க. ஆதரவாளர்

[யாழ்ப்பாணம்]

பொத்துவில் இரண்டாவது எம். பி. திரு. எம். கனகரத்தினம் பூரண குணம்பெற்று, நீடித்த ஆயுளுடன் வாழவேண்டும் என்று காங்கேசன்துறை ஐ. தே. க. ஆதரவாளர்கள் அவருக்கு வாழ்த்துத் தந்திகள் அனுப்பிவைத்துள்ளனர். காங்கேசன்துறைத்தொகுதி ஐ.

[6 ம் பக்கம் பார்க்க]

## பொருளாதார—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யைப் பெறுவதற்காக, பல திட்டங்களைத் தீட்டியுள்ளோம். சங்க கிராமிய வங்கி மூலம் தவணை முறையில் பணம் செலுத்தக்கூடியதாக கடன் வழங்கிவருகின்றோம். மேலும் குறைந்த வட்டியில் கூடுதலான பணம் வழங்கி மக்களிடையே விவசாயம், கோழி, மாட்டுப்பண்ணைகளை விருத்தி செய்ய நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். இச்சங்கத்தில் கடன் பெற்றவர்கள் அதை உரிய காலத்தில் கட்டினால், மேலும் பல திட்டங்களை வகுக்க உதவும்.''

கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளர் திரு. இ. மு. நாகலிங்கம் கோழிப்பண்ணை வளர்ப்புத் திட்டம்பற்றி விளக்கினார்.

திருமதி கே. சிவரத்தினம், திருவாளர்கள் த. குமாரவேல், த. ச. அப்புத்துரை, க. இராமச்சந்திரா, சி. சிவஞானம், இ. மு. கனகலிங்கம், பொ. கணேசலிங்கம், வே. மகேந்திரராசா, மிருக வைத்தியர் திரு. பத்மநாதன், செல்வி பீ. இராசையா ஆகியோரும் பேசினார்கள். [க]

## மூன்றுமுறை பாம்பு கடித்தது!

[அக்குரஸ]

பாம்பின் சாபத்திற்குள்ளான குடும்பம் எனக் கூறப்படும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவனை பாம்பு மூன்றாவதுமுறையாகத் தீண்டியுள்ளது.

ஆயினும் வண. ரம்புக்கண குணரத்தின தேரோ என்ற விஷக்கடி சிகிச்சை நிபுணர் இம்முறையும் விஷத்தை இறக்கி சிறுவனைக் காப்பாற்றியுள்ளார்.

அக்குரஸ்ஸ தொகுதியில் உள்ள இன்டிகட்டுதெனிய என்னுமிடத்தைச் சேர்ந்த கருணதிலக என்னும்சிறுவனே இவ்விதம்பாம்பினால் பழிவாங்கப்படும் பரிதாபத்துக்குரிய சிறுவனாவான்.

கருணதிலக குடும்பம் பாம்புகளுக்கு அஞ்சி எட்டுமுறைதங்கள் இல்லத்தை மாற்றியுள்ளனராம். [கி—அ]

## புதிய சந்தை

[ஊரெழு]

''இந்தப் புதிய சந்தையின் வளர்ச்சி பொதுமக்களின் கைகளிலேயே தங்கியிருக்கிறது. மக்கள் ஆதரவு இல்லையெனில் சந்தை அமைக்கப்பட்டதனால் எவ்வித பயனும் ஏற்படாது'' என்று ஊரெழுவில் புதிதாக அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத்தை திறந்து வைத்துப்பேசிய கோப்பாய் எம். பி. திரு.சி கதிரவேலுப்பிள்ளை கூறினார்.

வலிகிழக்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. சு. மாணிக்கவாசகர்சந்தையில் விற்பனையை ஆரம்பித்துவைத்தார்.

உரும்பிராய் - ஊரெழு பட்டினசபையின் முன்னாள் தலைவர் திரு. கி. செல்லத்துரைதலைமையில் நடைபெற்ற மேற்படி திறப்புவிழா வைபவத்தில் ஊரெழு வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் திரு. சு. கதிரவேலு உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றினர். உரும்பராய்- ஊரெழு பட்டினசபை விசேடஆணையாளர் திரு. த. சின்னத்துரை நன்றியுரை கூறினர். (உ)

## டலாடு விழா...

(4ம் பக்கத் தொடர்ச்சி]

காக்கின்றார் முத்தமிழர்'' என்ற தலைப்புக்களில் இரு கவியரங்குகளும் நாடகங்களும் நடைபெறும் இறுதி நாள் நிகழ்ச்சியில் யாழ்ப்பாணம் எம். பீ. திரு. வெ. யோகேஸ்வரன் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார். (உ)

## சந்தை நிலவரம்

பொருட்கள் -- யாழ்ப்பாணம்

| விபரம் | | வெளிச் சந்தை ரூ.-ச. | விற்பனை இலாகா ரூ.-ச. |
|---|---|---|---|
| அரிசி | 4 சுண்டு ... | 3-75 | |
| உழுந்து [முழு] | ருத்தல் ... | 2 00 | |
| பயறு | ருத்தல் ... | 2-60 | |
| செத்தல் மிளகாய் | ருத்தல் ... | 10-50 | |
| பச்சை மிளகாய் | ருத்தல் ... | 2-60 | 2-10 |
| பெரிய வெங்காயம் | ருத்தல் ... | 3-75 | 2-80 |
| புளி | ருத்தல் ... | 1-40 | |
| உப்பு | ருத்தல் ... | -15 | |
| சோயா | ருத்தல் ... | 2-50 | |
| கோப்பிக்கொட்டை | ருத்தல்... | 20-00 | |
| சர்க்கரை | ருத்தல் ... | 2-75 | |
| உருளைக்கிழங்கு | ருத்தல் ... | 3-00 | |
| மரவள்ளிக்கிழங்கு | ருத்தல் ... | -60 | -50 |
| கத்தரிக்காய் | ருத்தல் ... | 1-70 | 1-00 |
| வெண்டிக்காய் | ருத்தல் ... | 1-60 | -80 |
| பயிற்றங்காய் | ருத்தல் ... | 2-00 | -90 |
| பூசணிக்காய் | ருத்தல் ... | -60 | -50 |
| பாகற்காய் | ருத்தல் ... | 2-00 | -70 |
| புடலங்காய் | ருத்தல் ... | -90 | -60 |
| தக்காளி (காய்) | ருத்தல் ... | -90 | |
| ,, (பழம்) | ருத்தல் ... | 1-20 | 1-00 |
| வாழைக்காய் | ருத்தல் ... | 1-40 | -75 |
| தேங்காய் | ஒன்று ... | 1-10 | 1-10 |
| கருணைக்கிழங்கு | ருத்தல் ... | -60 | -50 |
| கீரை | பிடி ... | -25 | |
| வெங்காயப்பூ | பிடி ... | -70 | |
| வல்லாரை | பிடி ... | -40 | -15 |
| தேங்காயெண்ணெ | போத்தல்... | 3-75 | |
| நல்லெண்ணை | போத்தல் ... | 15-00 | |
| கரட் | ருத்தல் ... | 3-00 | 1-50 |
| பீட்றூட் | ருத்தல் ... | 1-40 | 1-00 |
| கோவா | ருத்தல் ... | 1-00 | -80 |
| லீக்ஸ் | ருத்தல் ... | 2-80 | 1-60 |
| தேசிக்காய் | ருத்தல் ... | | 1-10 |
| இராசவள்ளிக்கிழங்கு | ருத் ... | 1-60 | 1-50 |


Regal (Jaffna)
தினசரி 2-30, 6-30 இரவு 9-45 மணிக்கும்
ரவிச்சந்திரன் காஞ்சனா நாகேஷ்
நடித்த
உத்தரவின்றி உள்ளேவா
புத்தம் புதிய கொப்பி (கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய் விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - விஜயா நடித்த
இரு மலர்கள்

50-வது நாளைநோக்கி வெற்றிநடைபோட்டு ஒடுகிறள்
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

ராஜா —யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சௌந்தரராஜன் — விஜயகுமாரி
ஏ. எல். ராகவன் — ராஜ்ஸ்ரீ
கல்லும் கனியாகும்

RIO Now Showing By Popular Demand
The Land That Time Forgot
(Family Entertainment)
From 4-2-78 Grand Release
High Velocity

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30,6-30, 9-45
ஜெய்சங்கர் கே. ஆர். விஜயா
நடித்த
வாயாடி
திரைக்கதை, வசனம் டைரக்ஷன்: மதுரை திருமாறன்.
[புத்தம் புதிய பிரதி]
சிறுவர்களுக்கான ஆங்கிலப் படக் காட்சி
பிரதி சனியும் ஞாயிறும் காலை 8-30 மணிக்கு மட்டும் காண்பிக்கப்படும்.
ஆசனங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்
[பள்ளிக்கூட ஒழுங்குகளுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.

நாலாவது வெற்றிவாரம்
ராணி வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் — ஜெனிட்டா
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
பொம்மலாட்டம்

வெற்றி நடைபோடுகிறது
லிடோ எம். ஜி. ஆர். - லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்.நகர்) போன்; 7693
நீதிக்கு தலைவணங்கு

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 9-30
ஜெமினி - சாவித்திரி
பூஜைக்கு வந்த மலர்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-30,
சிவாஜி, ஜெமினி
சரஸ்வதி சபதம்

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
K. பாலாசந்தரின்
அபூர்வராகங்கள்

## யாழ். மாநகரசபைத் தொழிலாளர் வேலைநிறுத்தம்:

# 21 கோரிக்கைகளும் ஆணையாளரின் பதிலும்

[யாழ்ப்பாணம்]

இலங்கை பொதுக் கைத் தொழில் தொழிலாளர் சங்க யாழ். நகர சபை கிளையினர் சமர்ப்பித்துள்ள 21கோரிக்கைகளும், அதற்கு யாழ். மாநகர ஆணையாளர் திரு. கே சிவ ஞானம் அளித்துள்ள பதிலும் கீழே தரப்பட்டுள்ளது.

### தொழிலாளரின் 21 கோரிக்கைகள்

1. யாழ். மாநகரசபையின் சகல பகுதிகளிலும் 6 மாதத் துக்கு மேல் வேலைசெய்யும் சகல தொழிலாளர்களும் உடனடியாக நிரந்தர மாதச் சம்பள ஊழியர்கள் ஆக்கப்பட வேண்டும்.

2. சம்பளம், வேதனம், அலவன்ஸ், லீவுகள், ரயில் வாரண்ட் ஆகியவை பற்றி எல். பி டி. சில்வா கொமிசன் நிர்ணயப்படுத்தியபடி அது அமுலாக்கப்பட்ட திகதியிலிருந்து யாழ். மாநகரசபை சகல தொழிலாளர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

3. யாழ். மாநகர சபை தொழிலாளர்கள் அவர்கள் செய்யும் தொழில்களுக்கேற்ப தரப்படுத்தப்பட்டு அத் தொழில்களுக்கு உரித்தான சம்பளங்கள் பழைய பாக்கியுடன் வழங்கப்படவேண்டும். உதாரணமாக தற்போது காவலாளிக்கு ஒருசாதாரண தொழிலாளியின் சம்பளமே வழங்கப் படுகிறது. இத்தகைய குறைபாடுகள் உடனடியாக நீக்கப் படவேண்டும்.

4. தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்ட சேமலாப நிதிப் பணம் உடனடியாக திருப்பிக் கொடுக்கப்படவேண்டும்.

5. 1-3-72ல் இருந்து 1 10-73 வரையும் சம்பளத்தில் ரூபா 1-10 குறைக்கப் பட்ட சகல தொழிலாளர்களுக்கும் அப்பணம் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும்

6. யாழ். மாநகரசபையின் சகல தனித்தனி பிரிவுகளுக்கும் சுகாதார வசதியுடைய தங்குமிடங்கள் தண்ணீர், மலசலகூட வசதிகளுடன் அமைத்துக்கொடுக்கப்படவேண்டும்.

7. நிரந்தர நாட்சம்பள ஊழியர்களுக்கு ரயில்வாரண்ட் கொடுக்கப்படவில்லை. இது உடனடியாக கொடுக்கப்பட வேண்டும்.

8. மின்சாரப்பகுதியிலுள்ள தொழிலாளர்கள் சகலருக்கும் ஆபத்து அலவன்ஸ் கொடுக்கப் படவேண்டும் அல்லது அத் தொழிலாளர்களை காப்புறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் செய்யப்படவேண்டும்

9. ஞாயிறு, போய, பிரசித்தநாட்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு ஒன்றரை நாள்சம்பளம் கொடுக்கப்பட்டு அத்தினங்களுக்குப் பதிலாக வேறொருநாள் லீவாகக் கொடு படவேண்டும்.

10. யாழ். மாநகர சபையில் வேலைக்கமர்த்தப்பட்டு உங்களால் தற்காலிக லிகிதர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கு உள்ளூராட்சி சேவீஸ் கமிஷனால் நியமிக்கப்பட்டுள்ள லிகிதர்களுக்குக் கொடுக்கப் படும் சம்பளம் இவர்களுக்கும் வழங்கப்படல்வேண்டும்.

11. ஏனைய உள்ளூர் ஆட்சி மன்றங்கள் வழங்குவதுபோல யாழ். மாநகரசபை மின்சாரப் பகுதி சகல தொழிலாளர்களுக்கும் சைக்கிள் அலவன்ஸ் வழங்கப்படல்வேண்டும்.

12. கடந்த காலத்தில் 103 சனிக்கிழமைகளுக்கு சம்பளம்வழங்கப்படாமல் இருக்கும் சகல தொழிலாளர்களுக்கும் அச்சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.

13. மராமத்து இலாகாவில் ரோட்டு வேலைசெய்யும் தொழிலாளர்கள் மத்தியில் அவர்களது சேவைக் காலத்திற்கேற்ப கங்காணிமார் பதவிகள் வழங்கப்படல்வேண்டும்.

14. சுகாதாரப்பகுதி. ஸ்ரேடியம், டாக்டர் சுப்பிரமணியம் பூங்கா, திறந்தவெளி அரங்கு ஆகியவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஏனைய தொழிலாளர்கள் அனுபவித்துவரும் 5 நாள் வேலைத் திட்டமுறை அமுலாக்கப்படல் வேண்டும்.

15. சகல வெளிப்புற தொழிலாளர்களுக்கும் சீருடை மழை அங்கி பாதுகாப்பு அணிகள் முதலியன வழங்கப்படல் வேண்டும்.

16. தற்பொழுது சுகாதாரப் பகுதியில் உள்ள 8 பிரதான தொழிலாளர்களும் சம்பள உயர்வுடன் கங்காணிமார்களாக்கப்படவேண்டும்.

17. நிரந்தர மாதச்சம்பள நியமன கடிதம் கொடுக்கப் பட்ட திகதிக்கும் நியமனம் நடைமுறைப் படுத்தப்பட்ட திகதிக்கும் இடைப்பட்ட காலத்து சம்பளம் அவ்விதம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டும்

18. சுகாதாரப் பகுதியில் வேலைசெய்யும் கங்காணிமார்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் வழங்கப்படவேண்டும்.

19. சகல தொழிலாளர்களுக்கும் சைக்கிள் வாங்குவதற்கு கடன் வழங்கவேண்டும்.

20. சுகாதாரப் பகுதி தொழிலாளரைப் பொறுத்த மட்டில் முன்பு பெயர் எடுத்த நேரத்துக்கு மாநகர சபையிலேயே பெயர் எடுக்கவேண்டும்.

21. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மாதத்துக்கு 7/50 சம்பளஉயர்வு உடன் வழங்கப் படவேண்டும்.

### ஆணையாளரின் பதில்

[1] 6 மாதத்திற்கு மேல் வேலைசெய்யும் சகல தொழிலாளருக்கும் நிரந்தர மாதச் சம்பளம் வழங்குமாறு எவ்வித சுற்றறிக்கையும் மேலிடத்தில் இருந்து கிடைக்கவில்லை. அப்படியானாலும் இதற்கு 2 லட்சம் ரூபா தேவைப்படும். வரிகளை கூட்டவேண்டியேற்படும்

(2) உள்ளூராட்சி ஆணையாரிடமிருந்து கிடைக்கப் பெற்ற அத்தனை சுற்றறிக்கையும் அமுல்செய்யப்பட்டுள்ளது.

(3) காவலாளி தொழிலாளிக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள வீதம் ஒரே மாதிரியன்று, அவரவர் பதவிக்கேற்ப தொழில் வழங்கப்படுகிறது.

(4) சேமலாபநிதி திருப்பிக் கொடுப்பதுபற்றி ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(5) இதுபற்றி தொழில் கோர்ட்டுக்கு பாரப்படுத்தியுள்ளேன். கோர்ட்டு தீர்ப்புக் கிடைத்ததும் அத்தீர்ப்புப்படி நடப்பேன்.

(6) நான் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளேன். முத்திரைச்சந்தியில் கூரை மாற்றி, அஸ்பஸ்றஸ் சீட் போடப்பட்டுள்ளது.

(7) கடந்த டிசம்பர் மாதம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பலநாள் சம்பளஊழியர் ரயில் வாரண்ட் எடுத்துவிட்டார்கள்.

(8) அரசாங்க மின்சார இலாகாவின் கொள்கைகடைப் பிடிக்கப்பட்டு, ஆணையாளர் அறிவித்தலுக்கு அமைய கொடுக்கப்படும்.

(9) இப்படியானகோரிக்கை எந்த சபையிலும் வழங்கப்படவில்லை.

(10) உள்ளூராட்சி ஊழியர் சம்பள எல்லை. 15-ம் இலக்க சேவைச்சட்டத்தினால், மாதம் 125 ரூபாவாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆணையாளரே நியமனம் செய்யவேண்டும் லிகிதரை பொறுத்தவரை சட்டபூர்வமான போட்டி பரீட்சை இடம்பெறும். சிலருக்கு தற்காலிகமாக வேறு வேலை கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

(11) சைக்கிள் அலவன்ஸ், யார் யாருக்கு கொடுப்பதென தீர்மானித்து கொடுக்கப்படுகிறது.

[12] தொழில் கோர்ட்டுக்கு பரப்படுத்தப்பட்டுள்ளது. தீர்ப்பு வந்ததும் அதன்படி நடப்பேன்.

(13) ரோட்டு வேலைக்கு 69 தொழிலாளர் இருக்கிறார்கள். இவர்களை மேற்பார்வை செய்ய18 மேற்பார்வையாளர் உள்ளனர். 4 தொழிலாளருக்கு 1 மேற்பார்வையாளர் சுகாதாரப் பகுதி கூடிய இடத்தை மேற்பார்வைசெய்ய வேண்டுமாதலால் அங்கு கங்காணி தேவை. இதற்குதேவையில்லை

(14) நூலகம், சுகாதார சேவைகள், போன்றவற்றிற்கு 5 நாள் வேலைத்திட்டம் ஏற்புடைத்தகாது.

(15) பொது மக்களோடு எமது கடமையில் நேரடித் தொடர்பு கொள்ளவேண்டி, சுகாதார பரிசோதகர், வருமான ஊழியர், மருத்துவமாது ஆகியோருக்கு மட்டுமே அடையாளம்காணும் முகமாக சீருடைகள்வழங்கலாம், ஏனையோருக்கு அவசியமில்லை. 800 ஊழியருக்கு சீருடைவழங்க 80,000 ரூபா தேவைப்படும் நிதிநிலைசீரில்லை.

[16] இவர்களுக்கு நேரடியாக கூறியிருக்கிறேன், காலிஸ்தானம் நிரப்பும் போது இவர்கள் பற்றி பரிசீலனை செய்யப்படும்.

[17] 10 வருடம் பூர்த்தி செய்த அத்தனைபேருக்கும் மாதச் சம்பளம் வழங்கப்பட்டு வந்துள்ளது.

[18] இவர்கள் நேரடியாக தொழிலாளர் முன் நின்று பார்வையிட்டு வேலைசெய்ய வேண்டியவர்கள் சைக்கிளில் சுற்றித் திரிந்து மேற்பார்வை செய்ய முடியாது. சுகாதார மேற்பார்வையாளருக்கு சைக்கிள் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது.

[19] நிதிநிலைமை தற்பொழுது சாத்தியமில்லை. அலுவலக ரீதியாக போத்குவரத்து படி பெறுகின்ற அத்தனை பேருக்கும் சையிக்கில் முற்பணம் கொடுக்கப்பட்டு வருகிறது.

[20] உள்ளூராட்சி அமைச்சின் தீர்மானத்திற்கிணங்கசுகாதார பகுதியில் விதிசுத்தம் செய்வோர் 5 பிரிவுகளாக பன்முகப் படுத்தப்பட்டுள்ளன முன்பு மத்திய இடத்திலிருந்து பெயர் பதியப்பட்டு வேலைக்கு சென்று பின்பு வந்து பதியும் முறை இருந்தது. புதியமுறைப்படி 2 மணிநேரம் மிச்சப்படுத்தப்பட்டு துரிதமாக வேலையும் நடக்கிறது. பொது மக்களும் நேரடி தொடர்பு கொள்ள வாய்ப்புண்டு மேலும் இதற்கான காரணம் கூறப்படவில்லை.

[21] அரசு வழங்கிய சகல அலவன்சும் கொடுக்கப்பட்டுள்ளது. எதனையும் நான் தடுத்து வைக்கவில்லை, ஒருங்கிணைந்த சம்பளத்துடன் இந்த 7 ரூபா 50 சதமும் சேர்க்கப்பட்டுள்ளது. (உ)

## கனகரின் —

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

தே. க. பிரதம அமைப்பாளர் திரு. எஸ். கே. என். சிவராஜா அனுப்பியுள்ள தந்தியில், ''உகந்தை முருகன்' உங்களைக் கைவிடமாட்டார்; நீங்கள் செய்த தர்மமும் உங்களைக் காக்கும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அளவெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு. கனகரத்தினம் எம். பி. கடந்த மாத நடுப்பகுதியில் தமது சொந்த ஊருக்கு வந்து சில தினங்கள் தங்கிச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

# கரையூர் 'மணி' மரணம் கொலை எனத் தீர்ப்பு

## 2 இளைஞர்களும் கைது

[யாழ்ப்பாணம்]

கரையூரைச் சேர்ந்த பொன்னுக்குட்டி மணிஎன்பவரின் மரணம் தொடர்பாக நடந்த மரண விசாரணையில் கொலைஎனத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

யாழ் பதில் நீதவான் திரு ஏ. அமிர்தலிங்கம் விசாரணை நடத்தினர்

இம் மரண விசாரணை நேற்று முன்தினம் முடிவடைந்தது.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதான துரைராஜா, தருமன் ஆகிய இரு வாலிபர்களை பெப்ரவரி 7ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (க அ)

# மிதிபலகைப் பிரயாணம்: வாலிபர் பலி

[முல்லைத்தீவு]

பஸ்ஸின் மிதிபலகையில் பயணம் செய்த பிரயாணி ஒருவர் பாலத்தினுள் விழுந்து பரிதாபமாக உயிர் துறந்தார்.

இச்சம்பவம் முல்லைத்தீவு ஒலுமடுவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சம்பவம் அதிகாலை முல்லைத் தீவிலிருந்து யாழ்பபாணம் சென்ற பஸ்ஸில் பிரயாணம் செய்த ஒலுமடுவைச் சேர்ந்த க. துரை என்பவரே இவ்வாறு மரணமானார்.

காயங்களுடன் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக் பட்ட பின்னரே இவர் மரணமானாராம்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே இவர் திருமணம் முடித்தார். (இ)

# மேற்கு ஜெர்மன் அரசுஉதவியுடன் இரசாயனத் தொழிற்சாலை

[கொழும்பு]

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் மற்றொரு புதிய தொழிற்சாலையை மேற்கு ஜெர்மனி அரசாங்கத்தின் உதவியுடன் நிறுவவிருக்கிறது.

கொழும்புக்கு அருகில் இப் புதிய தொழிற்சாலை நிறுவப் படும்.

இயந்திர சாதனங்கள் முதலானவை தருவிக்கப்படுவதற்கு மேற்குஜெர்மனி அரசாங்கத்தின் உதவி பெறப்படும்.

இத் தொழிற்சாலை மூலம் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்றும் கோஸ்டிக் சோடாவின் உற்பத்தி இருமடங்காக அதிகரிக்கும் என்றும் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார்.

மேற்கு ஜெர்மனி அரசாங்கத்தின் உதவியைப் பெறுவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தற்போதுநடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## அடையாளம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரையும் பொலிஸார் விசாரணை செய்துள்ளதாகத் தெரிகிறது.

### உடல் நிலை அபிவிருத்தி

திரு கனகரத்தினத்தின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் சரளமாக உரையாடுகிறார் என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர். [மா இ]

## சன்சோனிக்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பொதுமக்களின் சாட்சியங்கள் பதிவாகும். மாசி 9-ம் திகதி சாட்சியமளிக்கும்படி ஏழு தனிபபட்ட வர்களுக்கும நேற்று முன்தினம் அழைப பாணை அனுபபிவைக்கபபட்டுள்ளது

இவ்விசாரணை பெரும்பாலும் மாசி 18 ம் திகதி வரை நடைபெறுமெனத் தெரிகிறது. ஆயினும் கமிஷன் தலைவர் விரும்பும்பட்சத்தில் விசாரணை நாட்கள் நீடிக்கபபடலாம் எனவும் தெரியவருகிறது. [கி]

## பேச்சுவார்த்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாளர் திரு. கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மாநகரசபைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைக் கைவிடும்வரை தாம் பேச்சு வார்த்தைக்குத் தயாரில்லை' என்றும் ஆணையாளர் திரு. க. சிவஞானம் தெரிவித்தார். [கா இ]

## யாழ். மாநகர...

[1ம்பக்கத் தொடர்ச்சி]

பகுதி, தற்காலிக ஊழியர் இந்த வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றியுள்ளதாக இலங்கை பொதுக் கைத்தொழில், தொழிலாளர் சங்க, யாழ் மாநகர சபை கிளையினர் தெரிவித்தனர்.

கூடாரங்களுக்குமுன் சுலோக அட்டைகள் தொங்கவிடப் பட்டிருந்தன, 'தொழிலாளரை நசுக்காதே' 'சேமலாப நிதியை கொடு' 'வெட்டப்பட்ட சம்பளத்தை வழங்கு' என சுலோகஅட்டைகளில்எழுதப்பட்டிருந்தது நகர சுத்தி தொழிலாளரும் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நகரசுத்தி தொழிலாளரில் ஒரு பிரிவினர் வேறு ஒரு தொழிற்சங்கத்தில் அங்கம் வகிப்பதால், அவர்கள் இந்த வேலைநிறுத்தில் நேற்று பங்கு பற்றவில்லை,

வீதிவெளிச்சம் போடப் படாதென்றும், விதிசுத்தம் செய்யப்படமாட்டாதென்றும் மின்சாரம் பழுதானால் உடனடியாக திருத்தப்படமாட்டாதென்றும், தண்ணீர் தடை ஏற்பட்டால் சீர்செய்யபடாதென்றும், வேலைநிறுத்தம் 21 கோரிக்கைகள் வழங்கும் வரை தொடர்ந்து நடைபெறுமென்றும் தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

முன்னாள் உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் தொழிலாளர் தலைவர்களை சந்தித்து ஒரு சுமுகமான முடிவு ஏற்படுத்துவதற்கு முயற்சித்தார். வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர் எந்நேரமும் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக திரு. துரைராஜசிங்கம் தெரிவித்தார். [ச]

இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389, Registered as a Newspaper in Sri Lanka;